# திருநீற்றுப் புதன் –இல்ல குடும்ப இறைவேண்டல் வழிபாடு

## 17 பிப்ரவரி 2021

*நீங்கள் இந்த வழிபாட்டுக்குப்பழையக் குருத்தோலைகளையோ அல்லது உலர்ந்த இலைகளையோ எரித்து அதன் சாம்பலைப் பயன்படுத்தலாம். எனினும், இல்லத்தில் தயாரிக்கப்படும் இந்த சாம்பல் அருளடையாள மதிப்பைக் கொண்டிருக்காது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தாய் திருஅவையால் வழங்கப்பட்ட அதன் உண்மையான சடங்குகளில் பங்கேற்க முடியாவிட்டாலும், நம்பிக்கை செயலால் நம்மை நமது தவக்காலப் பயணத்தில் ஒன்றிணைக்கஆவல் கொள்கிறோம் என்பதை நினைவூட்டுவதாக இந்த சாம்பல் தயாரிப்பு அமைகிறது.*

*வருகை பல்லவியைச் சேர்ந்து சொல்லலாம் அல்லது பொருத்தமான பாடலை பாடலாம்.*

வருகைப் பல்லவி சாஞா 11:24,25,27

ஆண்டவரே, மனிதர் அனைவர் மீதும் நீர் இரக்கம் காட்டுகின்றீர். நீர் படைத்த எதையும் வெறுப்பதில்லை. மக்கள் மனம் வருந்தும்போது அவர்களுடைய பாவங்களைப் பாராமல் இருக்கின்றீர்; நீர் அவர்களை மன்னிக்கின்றீர். ஏனெனில் நீரே எங்கள் இறைவனாகிய ஆண்டவர்.

அனைவரும் சிலுவை அடையாளம் வரைதல்.

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.ஆமென்.

வழிநடத்துனர் : தந்தை, மகன், தூய ஆவியார் வாழ்த்தப்பெறுவராக
எல் : இறைவன் என்றென்றும் வாழ்த்தப்பெறுவாராக.

வழிநடத்துனர் : திருநீற்றுப் புதன் நற்கருணை கொண்டாட்டத்தில் நம்மால் முழுமையாக பங்கேற்க முடியவில்லை என்பதால், இறைவார்த்தையைத் தியானித்து, உலகெங்கிலும் உள்ள இறைமக்களுடன் இறைவேண்டல் வழியாக ஒன்றிணைவோம்.

மன்றாடுவோமாக :

ஆண்டவரே, புனித நோன்புகளின் வழியாகக் கிறிஸ்தவ வாழ்வின் போராட்டத்தைத் தொடங்க எங்களுக்கு உதவியருளும்; அதனால் ஆன்மீகத் தீமைகளுக்கு எதிராக நாங்கள் போரிட்டு, தன்னடக்கத்தின் உதவியால் காக்கப்படுவோமாக .உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய்

என்றென்றும் வாழ்ந்து, ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

*முதல் வாசகம் ( வேண்டுமானால் நற்செய்தி மட்டும் படிக்கலாம்).*

**நீங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொள்ளுங்கள்.**

**இறைவாக்கினர் யோவேல் நூலிலிருந்து வாசகம்** 2: 12-18

ஆண்டவர் கூறுகிறார்: இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்; நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள். அவர் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர்; நீடிய பொறுமையுள்ளவர், பேரன்பு மிக்கவர்; செய்யக் கருதிய தீங்கைக் குறித்து மனம் மாறுகின்றவர். ஒருவேளை அவர் தம் மனத்தை மாற்றிக்கொண்டு, உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு தானியப் படையலையும் நீர்மப் படையலையும் நீங்கள் அளிக்குமாறு உங்களுக்கு ஆசி வழங்குவார். இதை யார் அறிவார்?

சீயோனில் எக்காளம் ஊதி எச்சரியுங்கள்; புனிதமான உண்ணா நோன்புக்கென நாள் குறியுங்கள்; வழிபாட்டுப் பேரணியைத் திரட்டுங்கள். மக்களைத் திரண்டு வரச்செய்யுங்கள்; புனித கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்; முதியோரைக் கூடிவரச் செய்யுங்கள், பிள்ளைகளையும் பால் குடிக்கும் குழந்தைகளையும் ஒருசேரக் கூட்டுங்கள்; மணமகன் தன் அறையை விட்டு வெளியேறட்டும்; மணமகள் தன் மஞ்சத்தை விட்டுப் புறப்படட்டும்.

ஆண்டவரின் ஊழியர்களாகிய குருக்கள் கோவில் மண்டபத்திற்கும் பலிபீடத்திற்கும் இடையே நின்று அழுதவண்ணம், ``ஆண்டவரே, உம் மக்கள்மீது இரக்கம் கொள்ளும்; உமது உரிமைச் சொத்தை வேற்றினத்தார் நடுவில் நிந்தைக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாக்காதீர்'' எனச் சொல்வார்களாக! `அவர்களுடைய கடவுள் எங்கே?' என வேற்றினத்தார் கூறவும் வேண்டுமோ?

அப்பொழுது ஆண்டவர் தம் நாட்டின்மேல் பேரார்வம் கொண்டு தம் மக்கள் மீது கருணை காட்டினார்.

வாசகர்: **ஆண்டவரின் அருள்வாக்கு.**
எல் : **இறைவனுக்கு நன்றி**

பதிலுரைப் பாடல் *திபா* 51: 1-2. 3-4a. 10-11. 12,15 (***பல்லவி:*** 1a)

*பல்லவி:* ஆண்டவரே! இரக்கமாயிரும்; ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்.

கடவுளே! உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும்; உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும்.
என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும்; என் பாவம் அற்றுப்போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும். - பல்லவி

ஏனெனில், என் குற்றங்களை நான் உணர்கின்றேன்; என் பாவம் எப்போதும் என் மனக்கண்முன் நிற்கின்றது. உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன்; உம் பார்வையில் தீயது செய்தேன். - பல்லவி

கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்; உறுதி தரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும். உமது முன்னிலையிலிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும்; உமது தூய ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும். - பல்லவி

உம் மீட்பின் மகிழ்ச்சியை மீண்டும் எனக்கு அளித்தருளும்; தன்னார்வ மனம் தந்து என்னைத் தாங்கியருளும். என் தலைவரே! என் இதழ்களைத் திறந்தருளும்; அப்பொழுது, என் வாய் உமக்குப் புகழ் சாற்றிடும். - பல்லவி

இரண்டாம் வாசகம்

*கடவுளோடு ஒப்புரவாகுங்கள்; இதுவே தகுந்த காலம்.*

திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 5: 20- 6: 2

சகோதரர் சகோதரிகளே,

நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கிறோம். கடவுளே எங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறார். ஆகவே கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம். நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையவராகுமாறு கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார்.

நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட அருளை வீணாக்க வேண்டாம் என அவரோடு இணைந்து உழைக்கும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். ``தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன்; விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன்'' எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!

வாசகர்: ஆண்டவரின் அருள்வாக்கு.
எல் : இறைவனுக்கு நன்றி

நற்செய்திக்கு முன் வசனம் திபா 50: 12,14

முடிவில்லா மகிமையின் பேரரசே, கிறிஸ்துவே உம்மை வாழ்த்துகிறோம்.
கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்; உம் மீட்பின் மகிழ்ச்சியை மீண்டும் எனக்கு அளித்தருளும்.
முடிவில்லா மகிமையின் பேரரசே, கிறிஸ்துவே உம்மை வாழ்த்துகிறோம்.

நற்செய்தி வாசகம்

*மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.*

மத்தேயு எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 6: 1-6, 16-18

அக்காலத்தில்

இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: ``மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள் முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது.

நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர் மக்கள் புகழ வேண்டுமென்று தொழுகைக்கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும். அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும்; மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.

நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது வெளிவேடக்காரரைப் போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகைக்கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்கவேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால் நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.

மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்க வேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப் படுத்திக்கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள்

நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது; மாறாக, மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்.''

வாசகர்: ஆண்டவரின் அருள்வாக்கு.
எல் : கிறிஸ்துவே, உமக்குப் புகழ்.

*குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் இறைவார்த்தையைப் பகிரந்துகொள்ளலாம் அல்லது சிறிது நேரம் மௌனம் காக்கலாம்.*

பாவிகளின் இறப்பை அல்ல, மாறாக அவர்களின் மனமாற்றத்தையே விரும்பும் இறைவா, எங்கள் மன்றாட்டுகளுக்கு இரக்கத்துடன் செவிசாயத்தருளும். நாங்கள் நம்பிக்கையினால் இச்சாம்பலை எங்கள் தலைகளில் ஏற்று, தவமுயற்சிகளைக் கடைபிடிப்பதனால் தூய உள்ளத்தோடு உமது திருமகனின் பாஸ்கா மறைபொருள் கொண்டாட்டத்தில் பங்கேற்கத் தகுதிபெறுவோமாக.என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

பதில்: ஆமென்.

*பின்னர் நம்பிக்கையோடு சாம்பல் தலையின் தூவப்படும்போது. பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றைக் கூறலாம்*

மனம் மாறி, நற்செய்தியை நம்புங்கள்.

அல்லது

கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்; உறுதிதரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டு

வழிநடத்துனர் :திருஅவை மற்றும் உலகின் தேவைகளுக்காக மன்றாடுவோம். ஆண்டவரே, எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

எல் :ஆண்டவரே, தயவாய் எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

திருஅவைக்கு: திருஅவை ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்கள் தூய ஆவியாரின் வழிகாட்டுதலை நாடி, இறைமக்களை இத்தவகாலத்தில் அர்த்தமுள்ள மற்றும் ஆன்மீக பயணத்திற்கு அழைத்துச் செல்வார்களாக.

பொதுப் பணியில்  உள்ளோர் : அவர்கள் தங்கள் பணியை மாண்புடன் செய்து, உலகில் நீதியும் மற்றும் அமைதியும் தற்காத்து மேம்படுத்துவார்களாக.

நோயுற்ற மற்றும் ஒதுக்கப்பட்டோருக்கு: இவர்கள் இறைவனில் மன அமைதியும்  ஆறுதலும் கண்டடைவார்களாக.

கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும்: இவர்கள் தங்கள் எல்லா அச்சங்களையும் கவலைகளையும் கைவிட்டு, எல்லா சூழ்நிலையிலும் இறைவன் அதரவு வழங்குவார்  என்பதை அறிந்து ஆறுதலடைவார்களாக.

நமக்காக: கருணை, உடல் ரீதியான மற்றும் ஆன்மீக பணிகளின் மூலம் நம் வாழ்க்கையையும் நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் மாற்றுவதற்கான மனவுறுதி நமக்கு இருப்பதாக.

*(நீங்கள் வேறு மன்றாட்டுக்ளையும் இணைத்துக்கொள்ளலாம்)*

மீட்பரின் கட்டளையால் கற்பிக்கப்பட்டு, இறை படிப்பினையால் பயிற்சி பெற்ற நாம் துணிந்து சொல்வோம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர்
தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது
திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல.
மண்ணுலகிலும் நிறைவேறுக!
எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும்.
எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள்
மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும்.
எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்.
தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

ஒருவருக்கொருவர் அமைதியைப் பகிர்ந்துகொள்வோம்.

எல் : எல்லாம் வல்ல இறைவா, உம் மக்கள் மீது குணமளிக்கும் உம் ஆவியாரைப் பொழிந்தருளும். எங்கள் தவக்கால தவமுயற்சிகள் உமக்கு ஏற்றதாகவும்  எங்களின் குணமளிப்புக்குரியதாகவும் அமைவதாக.எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

வழிநடத்துனர்: ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமைகள் அனைத்தினின்றும் பாதுகாத்து, நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.

எல் : ஆமென்.

வழிநடத்துனர்: ஆண்டவரைப் புகழ்வோம்

எல் : இறைவனுக்கு நன்றி

**இறுதி பாடல்** (*பொருத்தமான* இன்னொரு பாடலை பாடலாம்.)

**எதை நான் தருவேன் இறைவா - உன்**
**இதயத்தின் அன்பிற்கீடாக**

1. **குறைநான் செய்தேன் இறைவா - பாவக்**
**குழியில் விழுந்தேன் இறைவா** (2)
**கறையாம் பாவத்தை நீக்கிடவே** - 2
**நீ கல்வாரி மலையில் இறந்தாயோ**

2. **பாவம் என்றொரு விசத்தால் - நான்**
**பாதகம் செய்தேன் இறைவா** (2)
**தேவனே உம் திருப்பாடுகளால்** - 2 **எனைத்**
**தேற்றிடவே நீ இறந்தாயோ**